# தேர்தல் ஆணையம் (அவுஸ்திரலேசிய)
# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் (நா.க.த.அ)
## Electoral Commission (Australasia)
## Transnational Government of Tamil Eelam (TGTE)

59B Franklin St
Parramatta NSW 2150 AUSTRALIA

email: ausnzl.ec@tgte.org
website: www.tgteelection.org

தேர்தல் ஊடக அறிக்கை - அவுஸ்திரேலியா 01 09 மார்ச் 2019

### தேர்தலுக்கான வேட்பாளர் தாக்கல் ஆரம்பம்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூன்றாவது அரசவைத் தேர்தல் அவுஸ்திரேலியாவில் 27 ஏப்ரல் 2019ல் நடைபெறவுள்ளது. நடைபெறவிருக்கும் தேர்தலைச் சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடாத்தி முடிப்பதற்கு உங்கள்ளின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

**1) முக்கிய திகதிகள்**

தேர்தலுக்குரிய பின்வரும் முக்கிய திகதிகளைக் கவனிக்கவும்.

| | |
|---|---|
| 10 மார்ச் 2019: | வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான ஆரம்ப நாள் |
| 24 மார்ச் 2019: | வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் |
| 25 மார்ச் 2019: | வேட்பாளர் பட்டியல் வெளியிடும் நாள் |
| 26 மார்ச் 2019: | வேட்பு மனுத் தாக்கல் மீளப்பெறுவதற்கான இறுதி நாள் |
| 27 ஏப்ரல் 2019: | தேர்தல் நாள் |

**2) வேட்பு மனு**

வேட்பு மனுவை www.tgteelection.org/australia/ என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளவும்.

குறிப்பாக, வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்கு முன்பு, முக்கிய வேட்பாளர் தகைமைகள் பற்றிய குறிப்புகளையும், மனுவுடன் இணைக்கபடவேண்டிய ஆவணங்கள் பற்றிய குறிப்புகளையும் கவனிக்கவும். வேட்பு மனுக்களை ausnzl.ec@tgte.org என்ற மின்னஞ்சல் மூலமாகத் தாக்கல் செய்யவும்.

**3) தேர்தல் பிராந்தியங்களும் அரசவை உறுபினர்களும்**

அவுஸ்திரேலியாவில் 10 அரசவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மாநிலங்கள் 3 பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உறுப்பினர்களின் எண்ணிக்கை பிராந்திய இரீதியாகக் கீழேதரப்பட்டபடி பிரிக்கப்பட்டுள்ளது:

**பிராந்தியும் 1:** நியுசவுத்வேல்ஸ் (NSW), குவீன்ஸ்லான்ட் (QLD) **(4 அரசவை உறுப்பினர்கள்)**

நியுசவுத்வேல்ஸ் மாநிலத்திலிருந்து 3 அரசவை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். குவீன்ஸ்லான்ட் மாநிலத்திலிருந்து 1 அரசவை உறுப்பினர் தேர்வு செய்யப்படுவார்.

**பிராந்தியம் 2:** விக்டோரியா (VIC), கன்பரா (ACT), தஸ்மேனியா (TAS) **(4 அரசவை உறுப்பினர்கள்)**

விக்டோரியா மாநிலத்திலிருந்து 3 அரசவை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். கன்பரா மற்றும் தஸ்மேனியா மாநிலங்களிலிருந்து 1 அரசவை உறுப்பினர் தேர்வு செய்யப்படுவார்.

**பிராந்தியும் 3:** மேற்கு அவுஸ்திரேலியா (WA), தெற்கு அவுஸ்திரேலியா (SA), வட பிரதேசம் (NT) **(2 அரசவை உறுப்பினர்கள்)**

மேற்கு அவுஸ்திரேலியா மாநிலத்திலிருந்து 1 அரசவை உறுப்பினர் தேர்வு செய்யப்படுவார். தெற்கு அவுஸ்திரேலியா மற்றும் வட பிரதேசத்திலிருந்து 1 அரசவை உறுப்பினர் தேர்வு செய்யப்படுவார்.

மேலதிக விவரங்களுக்கு www.tgteelection.org/australia/வை அணுகவும். மேலும், தேர்தல் மற்றும் வேட்பாளர் மனுத் தாக்கல் பற்றிய மேலதிகமான வினாக்களை ausnzl.ec@tgte.org மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

தேர்தல் தொடர்பான அறிவித்தல்களைத் தொடர்ந்தும் எதிர்பாருங்கள்.

நன்றி,

தேர்தல் ஆணையாளர், அவுஸ்திரேலியா

நா.க.த.அ தேர்தல் ஆணையம்

மின்னஞ்சல்: ausnzl.ec@tgte.org